[1975 நவம்பர் 10

கோயில் திருப்பணிகள்

*** 270 வினு—திரு. வை. பாலசுந்தரம் : மாண்புமிகு அறநிலேயத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடை** யளிப்பாரா—

அச்சிறுபாக்கம் ஆட்சிஸ்வரர் கோயிலேத் திருப்பணி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனேயில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: இல்லே.

திரு. வை. பாலசுந்தரம்: இந்த அச்சிறுபாக்கம் ஆட்சிஸ்வரர் கோவிலே, மிகப் பழம்பெருமை வாய்ந்த கோவிலே மதுராந்தக சோழன் என்ற புகழ்பெற்ற மன்னன்தான் கட்டினுன். அப்பர், சுந்தரர் போன்ற பழம்பெரும் புலவர்கள் எல்லாம் இந்தக் கோவிலில் உட்கார்ந்துதான் பெருமை பெற்ருர்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தக் கோவிலுக்கு எவ்வளவோ ஆண்டுக் காலம், நூருண்டுகளுக்கு மேல் ஆகிறது கும்பாபிஷேகம் செய்து என்று பக்தர்களால் சொல்லப்படுகிறது. ஆகவே கருணே உள்ள நம் அரசு இதை கருணேயோடு பரிசீலனே செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : ஏற்கனவே இந்தக் கோவிலினுடைய திருப்பணிக்கு ரூ. 50,000 க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தால் வேலே இன்னும் தொடங்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக வேலேகள் தொடங்கப்படுவதற்கு ஒரு திருப்பணிக் குழு அமைக்க வேண்டும் என்று அறநிலேய உதவி ஆணேயாளரால் கேட்கப்பட்டுள்ளது.

திரு. சி. ஆறுமுகம் : பொதுவாக தமிழ்நாட்டின் பெரிய கோவில்களுக்கு எல்லாம் கும்பாபிஷேகம் செய்து வருகிருர்கள். அப்படி கும்பாபிஷேகம் செய்வதனுல் நாட்டு மக்களுக்கு பயன்கள் ஏற்படுகின்றன என்று அப்படி ஏதாவது தகவல் உண்டா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பொதுவாகவே நன்மை ஏற்படுவதாகச் சொல்கிருர்கள்.